உ

ஸ்ரீ சுகவனேஸ்வரர் துணை

SINCE 1961



Incredible !ndia

SRI SWARNAMBIGAI ALL INDIA TRAVEL CO

SALEM · 636001.

GOLDEN JUBILEE 50 YEARS 1961 - 2010



ஜெய்பத்ரி விஷால்

# ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகை ஆல் இந்தியா ட்ராவல் கம்பெனி®

(Recognized by the Ministry of Tourism, Government of India)

"ஸ்ரீதர் காம்ப்ளக்ஸ்", No. 124 / 1, டவுன் இரயில்வே ஸ்டேஷன் ரோடு,

(டவுன் இரயில்வே ஸ்டேஷன் எதிரில்) சேலம் – 636 001. தமிழ்நாடு.

(ஸ்தாபகர் : S.S. மஹாதேவ முதலியார்)

Ph : 0427 - 2450622, 633, 644, 2450543, 4051991 ❖ Fax No. : 0427 - 2450644

## 2018 ம் வருட பிரயாண விபரம்

58 ஆண்டு காலமாக **ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகை ஆல் இந்தியா டிராவல் கம்பெனியாரின்** 309 வட இந்திய யாத்திரைகளை ஸ்பெஷல் கேரேஜுகள் மூலமாகவும் 9 தனி ஸ்பெஷல் ரயில்கள் மூலமாகவும், ரிசர்வேஷன் மூலமாகவும், இலங்கை, அந்தமான் தீவு மற்றும் கிழக்காசிய நாட்டுப் பயணங்களை கப்பல், விமானம் மூலமாகவும் சிறப்பாக நடத்தி பொதுமக்களின் நல்லாசிகளையும், நம்பிக்கையையும் பெற்றவரும் மற்றும் ஆர்ய வைசிய பெருமான்

திரு. **P.R.R. சீதாராம செட்டியார்** அவர்களால்

1976 –ல் பாராட்டி 7 ½ பவுன் தங்க செயினை பெற்றவரும், **கிருபானந்த வாரியார் சுவாமி** அவர்களால் ''**யாத்திரை சக்ரவர்த்தி**'' என்ற பெயர் பெற்றவருமான **அமரர். S.S. மஹாதேவ முதலியார்** அவர்களின் பேரனும், **S.M. சுவாமிநாதன்** அவர்களின் மகனுமாகிய **S. சந்திரசேகர்** அவர்கள் உடன் இருந்து பிரயாணம் சம்பந்தப்பட்ட சகல ஏற்பாடுகளையும் செய்து வருவார்.

## தனி 3 - Tier (Special Carriage) மூலம் செல்லும்

## வட இந்திய காசி யாத்திரை!

**பயண எண் : 1**

# 16 நாட்கள் கொண்ட வட இந்தியா

**ஆக்ரா, மதுரா, ஜெய்ப்பூர், புது டில்லி, அமிர்தசரஸ், ஹரித்துவார், ரிஷிகேஸம், நைம சாரண்யம், அலகாபாத், அயோத்தியா, கயா, காசி யாத்திரை ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
| புறப்படும் / வந்து சேரும் இடம் | : | **சென்னை சென்ட்ரல்** |
| புறப்படும் தேதி | : | **இரண்டாம் வகுப்பு** 3 - Tier Non A/c **கேரேஜ்** **(ஸ்பெஷல் கேரேஜ்)**<br>**20.03.2018, 10.09.2018, 08.10.2018** |

## கட்டண விபரம்

- இரு படுக்கை கொண்ட ஒரு அறையில் இருவர் மட்டும் நபர் 1-க்கு ரூ. **35,175/-** மட்டும்.
- இரு படுக்கை கொண்ட ஒரு அறையில் மூவர் மட்டும் (ஒரு எக்ஸ்ட்ரா பெட்டுடன்) நபர் 1-க்கு ரூ. **33,975/-** மட்டும்.
- சிறுவர் கட்டணம் : 5 வயதிலிருந்து 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு நபர் 1 – க்கு ரூ. **29,875/-** மட்டும். (சிறுவர்களுக்கு தனி பர்த் மற்றும் தனி பெட் வசதி இல்லை)

இப்பயணத்தில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் முன்பணம் ரூ. 10,000/- வீதம் நபர் 1-க்கு செலுத்தி பெயர், வயது, இரண்டு ஸ்டாம்ப் சைஸ் போட்டோ ஆகியவற்றுடன் பதிவு செய்து கொள்ளவும். மீதித்தொகை வண்டி புறப்படுவதற்கு 20 நாட்களுக்கு முன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டியது.

**பிரயாண விபரம் :**

சென்னை சென்ட்ரலிலிருந்து தூங்கும் வசதி கொண்ட தனி (ஸ்பெஷல்) 3 - Tier கேரேஜ் “இரண்டாம் வகுப்பு“ மூலம் ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகை அம்மன் அருளால் புறப்படுதல்.

| | | |
|---|---|---|
| **ஆக்ரா** | : | பஸ் மூலமாக ஆக்ரா கோட்டை, தாஜ்மஹால் பார்த்தல். |
| **மதுரா** | : | கண்ணன் பிறந்த இடம் பார்த்து திரும்புதல். |

**ஜெய்ப்பூர் ( 1 நாள்)** : பஸ் மூலமாக அம்பர் பேலஸ், ஹவா மஹால் (வழி), சிட்டி பேலஸ், ஜன்தர் மந்திர், பிர்லா மந்திர் பார்த்து திரும்புதல்.

**புதுடெல்லி (1-ம் நாள்) :** பஸ் மூலமாக முருகன் கோவில், பிர்லா மந்திர், குதுப்மினார், லோட்டஸ் டெம்பிள், தீன்மூர்த்தி பவன், பார்லிமெண்ட் கட்டிடம் (வழி), ராஷ்டிரபதி பவனம் (வழி), பிர்லா ஹவுஸ், இந்திராகாந்தி நினைவிடம், இந்தியா கேட் பார்த்து திரும்புதல்.

**2-ம் நாள்** : அவரவர் இஷ்டம் போல் பஜார் சென்று வருதல்.

**அமிர்தசரஸ் ( 1 நாள்):** சீக்கியர் பொற்கோவில், ஜாலியன் வாலாபாக் நினைவிடம், மாலை அவரவர் சொந்த செலவில் வாகா பார்டர் பார்த்து வருதல்.

**ஹரித்துவார் ( 1 நாள்):** கங்கா நதிக்கு சென்று நீராடி சுத்த கங்கை எடுத்து தீர்த்தம் கட்டி வருதல். மானசாதேவி கோவில் பார்த்தல். இங்குதான் பத்ரி, கேதார்நாத்திற்கு செல்ல ஸ்வெட்டர், பனிக்குல்லாய், கை உறை, காலணிகள் வாங்க வேண்டும்.

**ரிஷிகேஷ்** : ராம்ஜுலா, ஸ்வர்க ஆசிரமம், கீதாபவனம் பார்த்தல்.

**நைம சாரண்யம்** : ரிஷிகள் தவம் செய்த இடம், சக்கர தீர்த்தம், ஸ்ரீ நாராயணன் ஆலயம் பார்த்தல்.

**அயோத்தியா** : ராம ஜென்ம பூமி, ஸ்ரீ ராமர் கோவில், சரயு நதி பார்த்தல்.

**அலகாபாத் ( 1 நாள்):** பஸ் மூலமாக சங்கமம் சென்று (படகு மூலமாக சொந்த செலவில்) மூன்று நதிகள் கலக்கும் திரிவேணி நதிக்கு சென்று சங்கல்பம், வேணிதானம் முடித்து திரும்ப பஸ் மூலம் ஆஞ்சநேயர் விஸ்வரூப தரிசனம், ஸ்ரீ சங்கராச்சாரியார் கோவில், ஆனந்தபவனம் பார்த்துத் திரும்புதல்.

**கயா ( 1 நாள்)** : பல்குனி நதி, அக்ஷயவடம், விஷ்ணுபாத் கோவில், புத்தர் ஞானோதயம் பெற்ற போதி விருட்ஷம், தாய்லாந்து, ஜப்பான், திபெத்-புத்தர் ஆலயங்களைப் பார்த்தல், ஐதீக காரியங்கள் செய்ய வேண்டுவோருக்கு ஏற்பாடு செய்தல்.

**காசி ( 2 நாள்)** : மகா கங்கா நதி ஸ்நானம், மணிகர்ணிகா கட்டத்தில் சக்கர தீர்த்த ஸ்நானம், ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் தரிசனம், அன்னபூரணி தரிசனம், காசி விசாலாட்சி கோவில் தரிசனம், துர்கா கோவில், கௌடிபாய் கோவில், துளசி மானேஸ்வரர் கோவில், கால பைரவர், சாரநாத் புத்தர் ஆலயம் பார்த்தல். இங்கு ஐதீக காரியங்கள் செய்வோருக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

2 - ம் நாள் : அவரவர் இஷ்டம் போல் பஜார் சென்று வருதல்.

## கட்டணத்தில் அடங்குபவை :

1. இரண்டாம் வகுப்பு 3-Tier **(தனி கேரேஜ்)** கட்டணம்.
2. **A/C பஸ்** மூலம் ஆங்காங்கு ஊர் சுற்றிப் பார்க்கும் பஸ் கட்டணம்.
3. ஆங்காங்கு பட்ஜெட் ஹோட்டல்களில் தங்கும் வாடகை (அமிர்தசரஸ் நீங்கலாக)
4. சைவ உணவு கட்டணம் (பெட் டீ, டிபன், காபி, மதிய உணவு, மாலை காபி, இரவு உணவு).
5. பிரயாண வழிகாட்டி செலவுகள்.
6. அரசாங்க சேவை வரிக் கட்டணம்.

## கட்டணத்தில் அடங்காதவை :

நுழைவுக் கட்டணம், படகுக் கட்டணம், நதிக்குச் செல்லும் ரிக்ஷா மற்றும் பஸ் பார்க்கிங்கிலிருந்து சுற்றிப் பார்க்கும் இடம் வரை செல்லும் ஆட்டோ, ரிக்ஷா செலவுகள், டெலிபோன், லாண்ட்ரி மற்றும் சொந்த செலவுகள்.

## முக்கிய குறிப்புகள் (ஸ்பெஷல் கேரேஜ்) :

1. ஊர்களைச் சுற்றிக் காண்பிக்க வழிகாட்டி ஒருவர் கூடவே இருந்து எல்லா ஊர்களையும் சுற்றிக் காண்பித்துக் கூட்டி வருவார். பிரயாணத்தின் பொழுது டூர் ஆர்கனைசர் அவர்களும், சமையற்காரர்கள், காவல்காரர்கள் முதலியோரும் கூடவேயிருந்து பிரயாணிகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தருவார்கள். 3-Tier Non A/c கேரேஜ் (Special Carriage) மூலம் செல்லும் பயணத்தில் வண்டிக்கு எப்பொழுதும் காவல் உண்டு. பெண்கள் பயமின்றி தனியாக பிரயாணம் செய்யலாம். தங்கும் ஊர்களிலும் சுற்றிப்பார்க்கும் இடங்களுக்கு செல்லும் போதும் சாமான்களை வண்டியிலேயே வைத்து சென்று வரலாம்.
2. இப்பயணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கேரேஜ் நமது பயணத்திற்கென்றே தனியாக ஒதுக்கப்பட்டுள்ள தனி 3-Tier Non A/c கேரேஜ் ஆகும். புறப்படும் இடத்திலிருந்து திரும்ப புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும் வரை அதே கேரேஜில் பயணம் செய்கிறோம்.
3. அட்வான்ஸ் தொகையை நேரிலோ அல்லது வெளியூர்வாசிகள் பேங்க் ட்ராப்ட் அல்லது இணைய தளத்தின் மூலமாகவோ செலுத்தலாம்.

   **SRI SWARNAMBIGAI ALL INDIA TRAVEL COMPANY**

   என்கிற பெயரில் பணம் அனுப்பக் கோருகிறோம். வெளியூர் செக்குகள் ஏற்று கொள்ள இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
4. இரயில்வேயில் ஏற்படும் கால தாமதத்தினாலோ வேறு எந்த காரணத்தினாலோ இந்த யாத்திரை அல்லது பயணங்கள், புரோகிராமில் குறிப்பிட்ட தினங்களுக்கு மேல் நீடித்தால், நீடித்த ஊரிலேயே நீடித்த நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் 1-க்கு 2,000/- ரூபாய் வீதம் அப்பொழுதே செலுத்த வேண்டும்.
5. **L.T.C.** அத்தாட்சியும் வழங்கப்படும். இடமுள்ளவரைதான் டிக்கட் ரிசர்வ் செய்யப்படும்.
6. இன்சூரன்ஸ் வசதி செய்து தரப்படும் (தனிக்கட்டணம்).

## பிரயாணிகள் கவனிக்க வேண்டிய முக்கிய விதிகள் :

1. பெண்கள் முக்கியமாக தங்க நகைகள் எதுவும் அணிந்து வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. உணவு வகைகளில் வடை, காபி இவைகளைத் தவிர வேறு எதற்கும் அளவு கிடையாது.
3. உணவு வகைகள் – நாம் தங்கும் இடம், கிடைக்கக் கூடிய பொருட்கள், நேரம், சீதோஷ்ண நிலை இவற்றை அனுசரித்து நல்ல முறையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.
4. இரயில் நிலையத்திலிருந்து அவரவர்கள் பொருட்களை அவரவர்களே நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்துள்ள வாகனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியது, விருப்பப்பட்டால் அவரவர் சொந்த செலவில் போர்டர் வைத்துக் கொள்ளலாம். அந்த செலவை நிர்வாகம் ஏற்காது.
5. சுற்றுலாவின் பொழுது ஏற்படும் போக்குவரத்து நெரிசல், ஸ்டிரைக், சாலை மறியல், பயணிகளால் ஏற்படும் காலதாமதம், விடுமுறை தினம், இரயில் தாமதம் ஆகிய இடையூறுகளால் நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள அனைத்து இடங்களில் சில சுற்றுலா தலங்களை பார்க்க இயலாமல் போனால் கம்பெனியார் பொறுப்பாளர் ஆக மாட்டார்கள். அதற்கான எந்தவித நஷ்டஈடும் தரப்பட இயலாது.
6. இரயில்வேயின் சட்டதிட்டப்படி 24 மணி நேரத்திற்குமேல் 1 மணி நேரம் பயணம் நீடித்தாலும், அந்த 1 மணி நேரத்தை 1 நாள் என்று தான் கணக்கிட வேண்டும்.
7. பெரிய பெட்டிகளை கண்டிப்பாக எடுத்து வரக்கூடாது. லக்கேஜ் 25 கிலோவுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் கொண்டு வரக்கூடாது. இடத்தை அடைக்கும்படியான பெரிய பெட்டிகளாகக் கொண்டுவராமல் காலுக்கு கீழே வைக்கும்படியான சிறிய பெட்டிகளாகக் கொண்டு வரவேண்டும்
8. வண்டிக்குக் காவல் இருந்தபோதிலும் வெளியே செல்லும்போது அவரவர் பெட்டிகளை பத்திரமாகப் பூட்டிச் செல்லுதல் வேண்டும்.
9. சாப்பாடு தட்டு, டம்ளர், மக், குடை, செயின் லாக், டார்ச்லைட், படுக்கை அனைவரும் கொண்டு வருதல் வேண்டும்.
10. வைத்திய வசதி தேவைப்படுவோர் 1 மணி நேரத்திற்கு முன்னால் கூறினால் தனியார் டாக்டருக்கு ஏற்பாடு செய்யப்படும். அதற்கான செலவு பயணிகளைச் சார்ந்தது.
11. பலகாரங்கள் அனைத்தும் ரீஃபைண்ட் ஆயிலில் தயாரிக்கப்படும். காபிக்கு சன்ரைஸ் அல்லது ப்ரூ பவுடரும், பாலுக்கு பால் பவுடரும் உபயோகிக்கப்படும்.
12. வண்டியில் யாரும் துணி துவைக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். வெளியில் தங்கும் இடங்களில் டோபி மூலம் சலவை செய்து கொள்ளலாம்.
13. பிரயாண கால அட்டவணை பிரயாணம் கிளம்புவதற்கு 10 தினங்களுக்கு முன் அனுப்பி வைக்கப்படும்.
14. பிரயாணிகள்,பயணத்தின் பொழுது கண்டிப்பாக “ ஒரிஜினல்” புகைப்பட அடையாள அட்டையை எடுத்து வரவேண்டும். பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், ஆதர் கார்டு, டிரைவிங் லைசன்ஸ் இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்து வரலாம். தவறினால் அபராதம் செலுத்த நேரிடும். அதனை பயணிகள்தான் செலுத்த வேண்டும் . நிர்வாகம் பொறுப்பேற்காது.
15. கம்பெனியாரால் ஏற்பாடு செய்யப்படும் வழிகாட்டி, தங்களை சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றி காண்பித்து வருவார். அந்த இடங்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் தேவைப்பட்டால் ஹிந்தி (அ) ஆங்கிலம் தெரிந்த கைடுகள் (அங்கு இருப்பின்) கம்பெனியாரால் ஏற்பாடு செய்து தரப்படும். அதற்கான கட்டணங்களை பயணிகள் தான் செலுத்த வேண்டும்.
16. அனைத்துப் பிரயாண விபரக்கட்டணங்கள் **2017–ம் வருடம் அக்டோபர் மாதம் 20–ம் தேதியன்று** தயாரிக்கப்பட்டவையாகும்.

17. மேற்கண்ட பிரயாண அட்டவணைகள் தயாரிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு இரயில் கட்டணங்கள் மற்றும் சுற்றிப் பார்க்கும் கட்டணங்கள், தங்கும் வாடகை உயர்த்தப்பட்டால் அனைத்து கட்டணங்களும் மாறுதலுக்கு உட்படும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம். அவ்வாறு உயர்த்தப்பட்ட கட்டணங்களை பயணிகள் தான் செலுத்த வேண்டும். நிர்வாகம் அந்தப் பொறுப்பை ஏற்காது.

18. பயணம் முடித்து திரும்பி வந்து சேரும் நான்கு மணி நேரத்திற்கு முன்பு வரை (உணவு நேரங்களில்) மட்டுமே உணவு வழங்கப்படும். கம்பெனியாரால் அதுவரைதான் உணவுக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

19. நெடுந்தூரப் பிரயாண காலங்களில் ஒரு சில இடங்களில் (தனிக்கேரேஜ் பயணிகள்) இரயில்வே கேன்டீன் மூலம் டிபன், காபி, உணவுகள் கம்பெனியார் செலவில் ஏற்பாடு செய்து தரப்படும்.

20. அட்வான்ஸ் தொகை செலுத்திய பிறகு 30 நாட்களுக்கு முன் கேன்சல் செய்தால் அட்வான்ஸ் தொகை ரூ. 10,000 /- இழக்க நேரிடும்.

21. வண்டி புறப்படுவதற்கு 30 நாட்களுக்குள் கேன்சல் செய்தால் முழு தொகை இழக்க நேரிடும். வர இயலாமல் நேரும் பொழுது தங்களுக்கு பதிலாக வேறு ஒரு நபரை பயணம் கிளம்புவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்பு மாற்றி அனுப்பலாம். அவ்வாறு செய்யும் பொழுது இழப்பீடு எதுவும் இல்லை.

22. புறப்படும் தேதி மற்றும் புரோகிராமை மாற்றவோ, திருத்தி அமைக்கவோ கம்பெனியாருக்கு பூரண உரிமையுண்டு.

23. பிரயாணத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கும், கால தாமதங்களுக்கும் கம்பெனியார் பொறுப்பாளர்களாக மாட்டார்கள்.

24. ஒவ்வொரு பிரயாணியும் அகில இந்திய இரயில்வேயின் சட்ட திட்டங்களுக்கும், அகில இந்திய பிரயாண ஏஜென்ஸியின் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.

**25. பிரயாணிகள், பிரயாணத்தை ரத்து செய்யும் பட்சத்தில் இழப்பீடு தொகை (கேன்சல் தொகை) போக மீதித் தொகை இருப்பின் கேன்சல் செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் காசோலையாக திருப்பித் தரப்படும்.**

**26. இந்தப் பயணம் கம்பெனியாரால் கேன்சல் செய்யப்பட்டால் தாங்கள் செலுத்திய முழுத் தொகையும் கேன்ஸல் செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் காசோலையாக திருப்பித் தரப்படும்.**

**N.B. : SUBJECT TO CHANGE BY THE RAILWAY AUTHORITIES**

All disputes are subject to Salem Jurisdiction

## நமது ஸ்தாபனத்தின் மூலம் செல்லும் இதர சிறப்பு பயணங்கள்

- 2 நபர்கள் முதல் தனியாக மற்றும் குழுவாக சுற்றுலா செல்ல சிறப்பு ஏற்பாடு செய்து தரப்படும்.
- இருவழி விமானம் மூலம் காசி யாத்திரை, பஞ்ச துவாரகை யாத்திரை, ஷீரடி பயணங்கள் குழுக்களாக அனைத்து வசதிகளுடன் செல்ல பயண திட்டங்கள் உள்ளது.
- சிங்கப்பூர், மலேசியா, துபாய், ஸ்ரீலங்கா, தாய்லாந்து ஆகிய வெளிநாட்டு பயணங்களும் குழுக்களாக அனைத்து வசதிகளுடன் செல்ல பயண திட்டங்கள் உள்ளது.

**மேலும் விபரங்களுக்கு கம்பெனியை தொடர்பு கொள்ளவும்.**